1956

| | | |
|---|---|---|
| **வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்** | | |
| **இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018** | | |
| **தரம் - 09** | **புவியியல்** | **நேரம் :- 2 மணித்தியாலம்** |

சுட்டெண் :- ..........................

## பகுதி I

❖ **மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

01) ஆசியாக் கண்டத்தின் தனி அமைவிடம்

1) தென் அகலக் கோடு 10° – வட அகலக் கோடு 70° வரையிலும், கிழக்கு நெடுங்கோடு 35° – 170° வரை.
2) தென் அகலக் கோடு 10° – வட அகலக் கோடு 80° வரையிலும் கிழக்கு நெடுங்கோடு 25° – 180° வரை.
3) தென் அகலக் கோடு 150° – வட அகலக் கோடு 75° வரை, கிழக்கு நெடுங்கோடு 25° – 170° வரை
4) தென் அகலக் கோடு 15° – வட அகலக் கோடு 80° வரை, கிழக்கு நெடுங்கோடு 25° – 180° வரை.

02) ஆசியாக் கண்டத்திலுள்ள சிறிய தீவுகளில் ஒன்று.
1) இலங்கை 2) பிலிப்பைன்ஸ் 3) மாலைதீவு 4) யப்பான்

03) ஆசியாவில் மிகக் குறைந்த வெப்பநிலை நிலவும் நகரம்.
1) வர்கோயேன்றிக் 2) வட்டவளை 3) கினிகத்தன்ன 4) மும்பாய்

04) யூப்ரட்டீஸ், தைகிரிஸ் நதி கடலோடு கலக்குமிடம்.
1) பசுபிக் சமுத்திரம் 2) ஏரல் கடல் 3) பாரசீகக் குடா 4) ஆட்டிக் சமுத்திரம்

05) காரிப், ராபி எனும் விவசாயப் பருவங்களைக் கொண்டுள்ள நாடு.
1) பாகிஸ்தான் 2) இந்தியா 3) யப்பான் 4) தாய்வான்

06) இலங்கையிலுள்ள கடனீரேரிகளுள் ஒன்று.
1) நயினாதீவு 2) பவுல் முனை 3) நீர்கொழும்பு 4) திருகோணமலை

07) கதிர்காமம், மிகிந்தலை, சிகிரியா என்பன
1) மலைத் தொடர்கள் 2) எச்சக்குன்றுகள் 3) கணவாய்கள் 4) கூம்புக் குன்றுகள்

08) உலகின் மிக ஆழமான நன்னீர் ஏரி.
1) தங்கனிக்கா ஏரி 2) பைக்கால் ஏரி 3) பொல்காஸ் ஏரி 4) தித்திக்கா ஏரி

09) அயனமழைக்காடுகளில் காணப்படும் தாவர இனங்கள்.
1) பைன், யுகெலிப்டஸ் 2) ஓக், ஸ்புரூஸ்
3) பைன், வாச் 4) மூங்கில், கருங்காலி

10) இலங்கையில் தென்மேல் பருவக் காற்று வீசும் காலம்.
1) மே – செப்ரெம்பர் வரை 2) டிசம்பர் – பெப்ரவரி வரை
3) மே – பெப்ரவரி வரை 4) மே – டிசம்பர் வரை

11) மலைநாட்டு ஈரவலயம் பெற்றுக் கொள்கின்ற மழைவீழ்ச்சியின் அளவு.
1) 2000 மி.மீ 2) 1250 – 2000 மி. மீ
3) 650 மி.மீ – 1250 மி.மீ 4) 3000 மி. மீ

12) மொங்கலோய்ட் இனமக்கள் வாழும் நாடுகள்.
1) இந்தியா, கொரியா 2) கொரியா, ஆப்கானிஸ்தான்
3) யப்பான், கொரியா 4) யப்பான், இந்தியா

13) சேவை நிலையமாக விளங்கும் நாடு
1) பாகிஸ்தான் 2) யப்பான் 3) இந்தியா 4) டுபாய்

14) இலங்கையில் என்றும் பசுமையான உலர் கலப்புக் காடுகள் காணப்படும் பிரதேசங்கள்.
1) சோமாவதிய, வஸ்கமுவ 2) மாத்தளை, தங்காலை
3) நாகியதெனிய, பம்பரகொட்டுவ 4) கந்தபொல, நக்கிள்ஸ்

15) இலங்கையில் சனத்தொகை அடர்த்தி கூடிய மாவட்டங்கள்.
1) அம்பாந்தோட்டை, மொனராகல 2) கண்டி, கம்பஹா
3) கொழும்பு, கம்பஹா 4) அம்பாந்தோட்டை

16) இலங்கையின் பெரும்பாலான ஆறுகள் பாய்ந்து செல்லும் வலயம்.
1) ஈர வலயம் 2) அரைவறன் வலயம்
3) தாழ்நில ஈர வலயம் 4) வரண்ட வலயம்

17) உலகில் கடும் குளிர் வலயத்தில் காணப்படும் காடுகள்.
1) இடைவெப்ப இலையுதிர் காடுகள்.
2) அயன மழைக்காடுகள்.
3) ஊசியிலைக் காடுகள்.
4) சவன்னாக் காடுகள்.

18) மூலப் பொருள் கனிய வளங்களை இறக்குமதி செய்து கைத்தொழில் முன்னனி வகிக்கும் நாடு.
1) சீனா 2) யப்பான் 3) மலேசியா 4) தென்கொரியா

19) 'அ' பகுதியை 'ஆ' பகுதியுடன் தொடர்புபடுத்தும் போது பெறப்படும் சரியான விடைத் தொகுதி.

| | |
|---|---|
| A. மியன்மார் | A முனை |
| B. பருத்தித்துறை | B நீர்வீழ்ச்சி |
| C. தியலும | C அயன மழைக்காடு |
| D. சிங்கராஜ | D ஐராவதி |

1) DBAC 2) DCBA 3) DABC 4) ADBC

20) கடற்கரையோரத்தில் காணக் கூடிய குத்துச் சாய்வு கொண்ட பாறைகள்
1) முனைகள் 2) மணல் மேடுகள் 3) ஓங்கல் 4) வன்பாறைகள்

(2x20 40புள்ளிகள்)


## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01) தரப்பட்ட இலங்கைப் புறவுருவப் படத்தில் பின்வரும் விடயங்களைக் குறித்துப் பெயரிடுக.

1) திருகோணமலை
2) கரையோரச் சமவெளி
3) அண்சமவெளி
4) பருத்தித்துறை
5) கொழும்பு
6) தெய்வேந்திர முனை
7) யாழ்ப்பாணம்
8) மன்னார்
9) மட்டக்களப்பு
10) கதிர்காமம்
11) மத்திய மலை நாடு
12) காலி

(12 புள்ளிகள்)



02)

01) இலங்கையில் சிங்கராஜ வனத்தில் காணப்படும் இயற்கைத்தாவர வகை யாது? (2 புள்ளி)

02) இத் தாவரத்தின் பண்புகள் மூன்று தருக. (3 புள்ளி)

03) காடுகள் அழிக்கப்படுவதற்கான காரணங்கள் மூன்று தருக. (3 புள்ளி)

04) இயற்கை தாவரங்களால் சூழலுக்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக. (4 புள்ளி)

03)

01) உயர அடிப்படையிலான இலங்கையின் தரைத்தோற்ற வலயங்களைத் தருக. (2 புள்ளி)

02) கரையோரச் சமவெளியில் காணப்படும் மூன்று பௌதிக அம்சங்களைத் தருக. (3 புள்ளி)

03) இலங்கை ஏற்றுமதி செய்யும் பெருந்தோட்ட உற்பத்திப் பொருட்கள் இரண்டு தருக. (3 புள்ளி)

04) மத்திய மலைநாட்டில் ஏற்படும் இயற்கை அனர்த்தத்திற்குக் காரணமான மனித நடவடிக்கை இரண்டு தருக. (4 புள்ளி)

04)

01) புவியின் பிரதான காலநிலை வலயங்களைத் தருக. (2 புள்ளி)

02) இலங்கை பெற்றுக் கொள்கின்ற மழை வீழ்ச்சி வகைகளைத் தருக. (3 புள்ளி)

03) இலங்கையின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்று தருக. (3 புள்ளி)

04) இலங்கையில் அதிகரித்த மழைவீழ்ச்சியினால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டு தருக. (4 புள்ளி)

05)

01) தனி அமைவிடம் என்றால் என்ன? (2 புள்ளி)

02) ஜப்பானின் பிரதான மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனங்கள் மூன்று தருக. (3 புள்ளி)

03) ஆசியாவில் அமைந்துள்ள இரண்டு நதிகள் இரண்டு மலைகளைத் தருக. (3 புள்ளி)

04) யப்பானின் கைத்தொழில் விருத்திக்குச் சாதகமான காரணிகள் மூன்று தருக. (4 புள்ளி)

06)

01) ஆசியாவில் கொகசோயிட் இன மக்கள் வாழ்கின்ற நாடுகள் மூன்று தருக. (2 புள்ளி)

02) ஆசியாவில் அதிக சனத்தொகை காணப்படும் சமவெளிகள் மூன்று தருக. (3 புள்ளி)

03) சமனற்ற சனத்தொகைப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் பௌதிக காரணிகள் மூன்று தருக. (3 புள்ளி)

04) சனத்தொகை அதிகரிப்பினால் ஏற்படும் பிரச்சினைகள் மூன்று தருக. (4 புள்ளி)

## தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## கட்டண விபரங்கள்

**ஆரம்பம் - 01.12.2024**

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

### தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

### English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457